

நிலையான ஆன்மிக மணம் கவழும் அமுத மனம். பக்கத்து வீட்டு மாமாவும் ஒன்றுவிட்ட ஊர்க்காரச் சொந்தமும் எப்பொழுதும் கண்காணித்திருக்கும் கோள் மூட்டும் விழிப்புணர்வுக் கேந்திரம்.

உன் வாழ்க்கை உன் கையில் என்று முடிவெடுக்கும் உரிமையை இந்திய நடுத்தர வர்க்கம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. ஆனால், தாங்கள் புலம் பெயர்ந்தபோது எப்படிப்பட்ட எண்ணங்களை வைத்திருந்தோமோ, அப்படியான விழுமியங்களையே தொடர்ந்து

> **தாங்கள் புலம் பெயர்ந்தபோது எப்படிப்பட்ட எண்ணங்களை வைத்திருந்தோமோ, அப்படியான விழுமியங்களையே தொடர்ந்து தேங்கிப் போய்விட்டிருக்கிறோம்**

தேங்கிப் போய்விட்டிருக்கிறோம்.

'தினமும் கோயிலுக்குப் போய் வருவாள். சிவசேனா மாதிரி நிறைய பேர் இருக்கிறார்கள். குட்டைப் பாவாடை எல்லாம் போட்டுக்கொள்ள மாட்டாள்.' - இது பெண்ணைப் பெற்றவர்.

'இங்கே படிப்பதையே பசங்க ரொம்பக் கேவலமா நெனக்கிறாங்க. சிரத்தையா பரீட்சை எழுதறவன கீக்னு சொல்லி அந்நியமாக்கி ஒதுக்கிடறாங்க. அவன் கே ஆயிடுவானோன்னு பயமா இருக்கு. அவனுக்கு ஃப்ரெண்ட்ஸே இல்லியே!'

இந்தியாவில் ஆண் குழந்தையைப் பெற்றவர் இப்படியெல்லாம் கவலை கொள்வதில்லை. தற்பால் விரும்பியாக இருப்பது அவரவர் விருப்பமென்று இந்தியப் பெருநகரங்கள் ஒப்புக் கொண்டுவிடலாம். ஆனால், அமெரிக்க வாழ் இந்தியருக்கு ஒவ்வாமை கலந்த அதிர்ச்சி தருவதாகவே ஓரினச் சேர்க்கை அமைந்துள்ளது.

இந்தியர்கள் காலப் போக்கிற்கு ஏற்ப மாற்றிக் கொள்வதில் வல்லுநர்கள். டார்வின் சொன்ன பரிணாம வளர்ச்சியில் முழு நம்பிக்கை கொண்ட அறிவியலாளர்கள். சிவன் தலையில் கங்கை இருப்பதை கும்பிட்டுக்கொண்டே அணை கட்டுவார்கள். அப்படியே மூன்றாம் பிறையை அரோகரா போட்டுக்கொண்டே சந்திரனில் நீர் இருப்பதை உலகெலாம் ஓதுவார்கள்.

இந்த விஞ்ஞானமும் மெய்ஞானமும் கலந்துருகும் கலயம் எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது. அந்த மாய யதார்த்தத்தைத் தேடித்தான் மக்கட் செல்வங்களை இந்தியாவை நோக்கித் திரும்ப அனுப்புகிறோமோ?!

# ஆஹா, முன்னேறிட்டாங்கப்பா நம்மாளுங்க!

## ஹாங்காங்கிலிருந்து சுப்பிரமணியன்



சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த சுப்பிரமணியனுக்கு, ஹாங்காங் ஓர் அசைவக் காடு. கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஹாங்காங்கில் வசித்து வரும் இவர், ஆயத்த ஆடைகள் வாங்கி விற்கும் ஒரு நிறுவனத்தின் மேலாளர்

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றார்கள். தேடத் துவங்கிய அந்த நாளின் வலியும், தேசம் தாண்டி, உறவுகளைத் துண்டித்து, பழகிய அனைத்தும் மறந்து, அன்னிய தேசம் சென்ற அந்த நாளின் பதைப்பும், பயமும் இன்னும் அடிவயிற்றில் சுவடுகளாய்.

ஹாங்காங்கில் அடியெடுத்து வைத்த வருடம் 1995. அப்போது இந்தியாவில் மொபைல் போன் அறிமுகப்படுத்தப்பட்ட புதிது. ஹாங்காங்கின் எழுபது லட்சம் மக்கள் தொகையில், ஏறக்குறைய தொண்ணூறு சதவிகிதம் பேர் கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்த காலம்.

நம் ஊரில் ஒரு நிமிடத்திற்கு இருபது ரூபாய், பதினெட்டு ரூபாய் என்று கொள்ளைக் கட்டணம். எம்.எல்.ஏ., எம்.பி., சினிமா நடிகர்கள் அல்லது பெரும் தொழிலதிபர்கள் மட்டுமே கைத்தொ(ல்)லைபேசி வைத்திருந்தார்கள்.

ஹாங்காங் மக்களைப் பார்த்து எனக்குள் ஒரு குற்ற உணர்ச்சியே எழும் அப்போது. இன்று பதினைந்து ஆண்டு கழித்து இந்தியாவில் கால் பதிக்கும்போது, நிலை கொள்ளாத பெருமை, தலைகொள்ளாத கர்வம். நடைபாதை இஸ்திரி வண்டிக்காரரர் கூட கைத்தொலைபேசியில் ஆர்டர் எடுக்கிறார். ஆஹா, முன்னேறிட்டாங்கப்பா நம்மாளுங்க.



என் தேசத்தை, அதன் நீளத்தை, தூரத்தை தொழில் நுட்பம் சுருக்கி விட்டது பிரமிப்பூட்டுகிறது. மக்களின் வாழ்க்கைமுறை ஏகத்திற்கும் மாறியுள்ளது. உலகமயமாக்கல், வர்த்தகம் என்று போகாமல், என் வரை உள்ள சின்னச் சின்ன ஆச்சரியங்கள்...

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அப்பாவின் அரசாங்க எல்.டி.சி.யில் கன்னியாகுமரியிலிருந்து சென்னைவரை வர முடியும், அவர் தமிழ்நாட்டு அரசு அதிகாரியாக இருந்ததால்... அதுவே ஒரு மத்திய அரசு அதிகாரியாக இருந்திருந்தால் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை போக முடியும். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்திருந்தால் இந்த வசதி சாத்தியமில்லை.

இன்று விடுமுறை என்றால், என் நண்பர்கள் வெளிநாட்டுக்கு வருகிறார்கள் ஏதோ பக்கத்து கிராமத்துக்குச் செல்வதுபோல... இது பணம் மட்டுமே தொடர்புள்ள வசதி வாய்ப்பு பெருகிய சூழல் மட்டுமன்று, அவர்களின் பார்வை, பிரயாணம் குறித்த அவர்களின் நோக்கம் விசாலமாகியிருப்பதும் முக்கியக் காரணம். இந்தியர்களின் குறிப்பாக தமிழர்களின் செலவு செய்யும் மனம் விரிவடைந்திருப்பது ஒரு பெரிய ஆறுதல்.



காணி நிலம். ஒவ்வொரு இளைய தலைமுறையினருக்கும் தனக்கென சின்னதோ, பெரியதோ ஒரு வீடு வாங்க வேண்டும் எனும் ஒரு தூண்டுதல் ஏற்பட்டிருக்கிறது. நானறிந்து துரைப்பாக்கத்தில் ஒரு பூர்வீக நிலம் நாலு கிரவுண்டோ ஐந்து கிரவுண்டோ அந்தக் காலத்தில் (அந்தக் காலத்தில் என்று நான் குறிப்பிடுவதை அறுவதோ அல்லது எழுவதோ என்று கற்பனை வேண்டாம். ஒரு பத்து அல்லது பன்னிரெண்டு வருடம் முன்னர் மட்டுமே) எங்கள் வீட்டருகே மயிலாப்பூரில் ஒரு மாமா வைத்திருந்தார். 'உங்களுக்கென்ன மாமா, நிலமெல்லாம் இருக்கிறது' என்றால், 'அட போடா... அங்க மனுஷன் போவானா? புதர்க்காடு' என்று புலம்பிய அவருக்கு, அது கோடிக்கணக்கில் போகும் என்றோ, பத்து வருடங்களில் அவருடைய மகன்கள் அந்த நிலத்தினால் மட்டுமே பி.எம்.டபுள்.யூ. காரில் போவார்கள் என்றோ கற்பனை செய்திருக்கக் கூட வாய்ப்பில்லை.

அன்று எங்கள் அப்பா யோசிக்காதது, அவருடைய அப்பா யோசிக்காதது... இளைய தலைமுறை யோசிக்கிறது. காணி நிலம் வேண்டும். அது நகரத்தை விட்டு நூறு கிலோ மீட்டர் தள்ளி இருந்தாலும் வாங்கிப் போட வேண்டும். வரவேற்கத்தகுந்த விஷயம். சிங்கப்பூர் போன்ற வளர்ந்த நாடுகளில் குடிமக்கள் சொந்த வீடு வைத்திருப்பதை அரசு விரும்புகிறது.

என்பீல்டு தொலைக்காட்சி தொடங்கிய காலம் (முடிவுற்ற காலமும் ஒரு சேரத்தான் என்பது எங்களுக்கு அப்போது தெரியாது). அந்தத் தொலைக்காட்சியை வாங்கி வந்து விட்டார் அப்பா.

அதன் ட்யூனிங் டயல் முறை, விநோதமானது. இப்போது இருப்பது போல் பட்டன் இருக்காது. ஒரு குழாய்